23.06.2025 அ.வ.எண். 347/2023 PW-1

| | |
|---|---|
| பெயர் | ரங்கராஜன் |
| த.பெ. | சின்னச்சாமி |

<u>**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

தாவா வண்டித்தடமானது நான் சொல்வது போல் 44 அடியோ அல்லது 60 அடியோ அல்லது 30 அடியோ இல்லை என்று சொன்னால் தவறு. பிரதிவாதிகள் என் பூமியினை விலைக்கு கேட்டதற்கு நான் மறுத்ததால் அவர்கள் பிரச்சனை செய்ததாக நான் கூறியதும், பிரதிவாதிகள் வண்டித்தடத்தினை தடுத்ததாக கூறியதும், பிரதிவாதிகள் அவர்கள் இடத்தினை தான் வேலி போட முயன்றார்கள் என்றும், ஆனால் வண்டித்தடத்தினை பிரதிவாதிகள் வேலி போட நான் முயன்றதாக சொல்வதும் பொய் என்றால் தவறு. நில அளவையர் தாக்கல் செய்த அறிக்கையின் அடிப்படையில் எனக்கு தடம் விட எந்த ஆட்சேபணையும் தெரிவித்திடவில்லை என்றும் அவர்கள் அதற்கு தயாராக இருப்பதாக சொன்னால் அந்த தடம் எனக்கு இடம் போதுமானதாக இல்லை, மேலும் தேவைப்படுகிறது. நான் பிரதிவாதிகள் இடத்தினை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும் என்றும் எனக்கு தடம் அகலமாக வேண்டும் என்பதற்காக தான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் தவறு. இந்த வழக்கினை தாக்கல் செய்வதற்காக வழக்கு மூலம் எதுவுமே எழவில்லை என்றும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் தவறு.

Sd/-V.Monika
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,
அன்னூர்.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.